**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர்மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திரு. S. ஜவகர், B.L.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2024-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10-ஆம் நாள் புதன் கிழமை**

**அசல் வழக்கு எண்.391/2021-ல்**

**வழக்கிடை மனு எண்.1014/2023**

சம்பத்குமார் .. மனுதாரர்/ பிரதிவாதி

/எதிராக/

ரெங்கராமானுஜம் .. எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பு 05.01.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.யுவராஜா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.அருளப்பன் அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, அவற்றை பெற்றுக்கொண்டு, வழக்கை மேல் நடத்த உத்தரவிடக் கோரி, மனுதாரர், உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கட்டளை-8 விதி-1(A)-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுவின் சுருக்கம் பின்வருமாறு** :

2. மனுதாரர், மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், மறந்து கைத்தவறி வைக்கப்பட்டுவிட்டதால், மேற்படி

அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் தாக்கல் செய்யாமல் விடுப்பட்டுவிட்டது. அந்த ஆவணங்கள், மனுதாரரின் வழக்கை நிரூபிப்பதற்கான வழக்கிற்கு சம்மந்தப்பட்ட மற்றும் முக்கியமான ஆவணங்கள் ஆகும். தற்போது மனுதாரருக்கு அந்த ஆவணங்கள் கிடைத்துவிட்டன. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமலும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்துகொள்ளாமலும் போனால், மனுதாரருக்கு பெருத்த அளவில் கஷ்டமும், எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும். எனவே, மனுதாரர், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, அவற்றை பெற்றுக்கொண்டு, வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டுமாய் பிரார்த்திக்கிறார்.

3. **எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சுருக்கம்** :

மனுதாரர்/பிரதிவாதியால் உவிமுச. கட்டளை 8 விதி-1A(3)-ன்படி தாக்கல் செய்துள்ள மனுவானது மிகவும் மோசமானது, அற்பமானது, தள்ளுபடி செய்யத்தக்கது. மனுதாரர்/பிரதிவாதி, 2 வருட காலமாக அமைதியாக இருந்து விட்டு தற்போது தான் தாக்கல் செய்கிறார். வழக்கின் நடவடிக்கையை தாமதப்படுத்தவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்று தெளிவாகிறது. உண்மையில் இந்த ஆவணங்களை எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போத தாக்கல் செய்யவேண்டும். மனுதாரருக்கு அவர் தரப்பு சாட்சிக்காக 3 முறை கடைசி வாய்ப்பு கொடுக்கப்பட்டது. 1-வது ஆவணமான 2005-2006 வருடங்கொண்ட குடும்ப அட்டை வா.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி 1-வது ஆவணம் தாக்கல் செய்ய வேண்டிய அவசியமில்லை. 2-வது ஆவணமான 07.03.2009 ந்தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம், அது பாகப்பிரிவினை பத்திரம் அல்ல, அது பாகப்பிரிவினைக்கான ஒரு ஒப்பந்தம் மட்டுமே. அது பதிவு

செய்யப்படாத ஆவணமாகும். அந்த 2-வது ஆவணம் இவ்வழக்கின் நடவடிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட ஆவணமல்ல. 3-வது ஆவணமான வீட்டு வரி ரசீதுகள் 4 -ஐ தனித்தனியாக தாக்கல் செய்வதற்கு பதிலாக ஒரே ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4 வீட்டு வரி ரசீதுகளில் , 2 வீட்டு வரி ரசீதுகள் மட்டுமே மனுதாரர்/பிரதிவாதி பெயரில் உள்ளது. மற்ற இரண்டு வீட்டு வரி ரசீதுகள் இவ்வழக்கு சொத்திற்கு சம்மந்தப்பட்டவை அல்ல. எதிர்மனுதாரர்/வாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.6-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனவே, 3-வது ஆவணம் தாக்கல் செய்வதற்கான அவசியம் இல்லை. 4,5 ஆவணங்களான மின்கட்டண அட்டைகள், 6-வது ஆவணம் மின் கட்டண ரசீதுகள் மனுதாரர்/பிரதிவாதியின் பெயரில் இல்லை. அவை வழக்கிற்கு சம்மந்தமற்றவை. 7 மற்றும் 8 ஆவணங்கள் 24.08.2021 ந்தேதியிட்ட பதில் அறிவிப்பு மற்றும் அதற்கான ஒப்புகை அட்டை. அசல் பதில் அறிவிப்பு வா.சா.ஆ.12-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதால், மேற்சொன்ன 7,8 ஆவணங்களும் தாக்கல் செய்யவேண்டியதில்லை. 9-வது ஆவணம், வசித்து வருவதற்காக பஞ்சாயத்து தலைவர் கொடுத்த கடிதம். வசிப்பிடத்திற்கான ஆதரவை வருவாய்த் துறை அதிகாரிகளால் (வட்டாட்சியர்) கொடுக்கப்படவேண்டும். கிராம பஞ்சாயத்து தலைவர் கொடுக்கக்கூடாது. எனவே, 9-வது ஆவணமானது சட்டத்திற்கு புறம்பானது, அதை ஆதாரமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஆவணங்கள் 10 மற்றும் 11 வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோரின் தாயார் ஜானகி மற்றும் தகப்பனார் சீனிவாச பிள்ளை ஆகியோரின் ஈமக்கிரியை பத்திரிக்கைகள் ஆகும். அவை இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டவை அல்ல. இருதரப்பிலும் ஜானகி மற்றும் சீனிவாச பிள்ளை உயிருடன் இல்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, 10, 11 ஆவணங்கள் தேவையற்றது. மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களும் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை. வழக்கின் நடவடிக்கையை

தாமதப்படுத்தவே தற்போது இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். எனவே, மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. மனுதாரர் தரப்பில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள், மறந்து கைத்தவறி வைக்கப்பட்டுவிட்டதால், மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்தில் தாக்கல் செய்யாமல் விடுப்பட்டுவிட்டது என்றும், அந்த ஆவணங்கள், மனுதாரரின் வழக்கை நிரூபிப்பதற்கான வழக்கிற்கு சம்மந்தப்பட்ட மற்றும் முக்கியமான ஆவணங்கள் என்றும், தற்போது தான் மனுதாரருக்கு அந்த ஆவணங்கள் கிடைத்தன என்றும், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பெற்றுக்கொள்ளாமலும், மனுதாரர் தரப்பில் குறியீடு செய்துகொள்ளாமலும் போனால், மனுதாரருக்கு பெருத்த அளவில் கஷ்டமும், எந்த வகையிலும் ஈடு செய்ய முடியாத கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும், எனவே, மனுதாரர், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து, அவற்றை பெற்றுக்கொண்டு, வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டுமாய் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில், சில ஆவணங்கள் வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுவிட்டதாகவும், மற்ற ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தமில்லாதவை என்றும், வழக்கின் நடவடிக்கையை தாமதப்படுத்தவே தற்போது இந்த ஆவணங்களை தாக்கல் செய்ய இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுவினை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமாய் வாதிடப்பட்டது.

6. இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்படி அசல் வழக்கானது, எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு எதிராக பாகம் கோரி வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி அசல் வழக்கில், வாதி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா வைக்கப்பட்டிருந்தபோது, மனுதாரர் தரப்பில், தன் தரப்பு வழக்கினை நிரூபிக்க மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து, ஆவணங்களை பெற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். வா.சா.ஆ.4-ஐ பரிசீலிக்கையில், குடும்ப அட்டையின் புகைப்பட நகலினை வா.சா.ஆ.4-ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், மேற்சொன்ன குடும்ப அட்டையின் அசலினை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கின் நடவடிக்கை தாமதப்படுத்தவே, ஏற்கனவே வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு சம்மந்தமானவைகளா? இல்லையா? என்பது குறித்து வழக்கு விசாரணையின்போது தான் தீர்மானிக்க முடியும். இந்த நிலையில் தீர்மானிக்க இயலாது. மேற்கண்ட சங்கதிகளை குறித்து சாட்சி விசாரணையின்போதும், ஆவணங்கள் குறியீடு செய்யும்போதிலும், எதிர்மனுதாரர் தன் தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம். இந்நிலையில், மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை பெற்றுக்கொள்ளக்கூடாது என்று எதிர்மனுதாரர் தரப்பில் கூறும் கூற்று ஏற்கத்தக்கதல்ல. எனவே, வழக்கின் தன்மைகளையும், சூழ்நிலைகளையும், கருத்தில் கொண்டு இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று தீர்மானித்து இவ்வாறாக இந்த மனுவில் பிரச்சனைக்குத் தீர்வுக் காணப்படுகிறது.

7. முடிவாக, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2024-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2024.01.10 18:24:06 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்** : இல்லை

S JAWAHAR Digitally signed by S JAWAHAR Date: 2024.01.10 18:24:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.